# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 13-09-2019 வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

பொருள் எண். 1

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.17348/2019/இ3, நாள் 03-09-2018-ன்படி இந்நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு கோரி பெறப்பட்ட பிரேரணையினை பரிசீலித்து ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2019-2020-ன்கீழ் சாலை பணிகள் செய்ய கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

Rs. in crores

| Sl. No. | Amount Allotted | TURIP | SFC/ CFC/Land regularisation Fund | ULB Contribution |
|---|---|---|---|---|
| 1 | 1.00 | 0.35 | 0.45 | 0.20 |

மேற்படி திட்டத்தின் கீழ் கீழ்காணும் பணியினை செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சி- வார்டு எண்.1-ல் படப்பறை முதல் வள்ளிக்கோட்டு குளம் வரை சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல், வார்டு எண்.4-ல் PWD அலுவலகம் முதல் பெருந்தெரு மீன்சந்தை வரை மற்றும் பெண்டுகடவு தெரு சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல், வார்டு எண்.5-ல் தபால் நிலைய சந்திப்பு முதல் கால்நடை மருத்துவமனை வரை (VLC மைதானம் அருகில்) பேவர் பிளாக் தளம் அமைத்தல், வார்டு எண்.7-ல் உண்டனாகுழி பகுதியில் சாலையில் தார் சாலை அமைத்தல், வார்டு எண்.10-ல் கொல்லக்குடி விளை சாலையில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | 100.00 |

மேற்காணும் சாலைகளை சீரமைக்க தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2019-2020-ன்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகை பங்கீட்டின்படி பணியினை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3333**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் மற்றும் தெருவிளக்கு பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் 4 பணியாளர்கள் 15-07-2019 முதல் ஓராண்டிற்கு நியமனம் செய்து பணி மேற்கொள்வதற்கு 14-08-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண். | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | 5.50 | 1) திரு.D ஜஸ்டின்குமார், மதிப்பீட்டு விகிதம்<br>2) திரு.D பிரேம்குமார், 0.23% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.D ஜஸ்டின்குமார் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். மதிப்பீட்டு தொகை ரூ.5.50 இலட்சம் வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3334**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான அலுவலக முன்புறம் உள்ள கடை எண்.5, 9 வருடம் முடிந்த நிலையில் பொது ஏலம் விடப்பட்டது. இதில் கடை உரிமம் கிடைக்காத உரிமதாரர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்கி கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | T.உதயசிங் | 2008-2009 | அலுவலக முன்புற கடை எண்.5 | 174853 | 41 & 42 |

**நகர்மன்றத் தீர்மான எண். 3335**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி.முனுசாமி வணிகவளாக கடைகள், வெட்டுவெந்நி அலுவலக முன்னால் கடைகளுக்கு 9 வருடம் முடிந்த நிலையில் பொது ஏலம் விடப்பட்டது. இதில் கடை உரிமம் கிடைக்காத உரிமதாரர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்ட்டது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திருப்பி வழங்கிட மன்ற அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | எஸ். சித்திக் | 2006-2007 | அலுவலக முன்னால் கடை எண்.6 | 162700 | 41, 42 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | விஜயகுமார் | 2006-2007 | அலுவலக முன்னால் கடை எண்.7 | 137560 | 41, 42 |
| 3 | முகம்மது இஸ்மாயில் | 2006-2007 | G10<br>F7 | 272300 | 39, 41, 42 |
| 4 | சுகேஷ் | 2001-2002 | குழித்துறை கடை2, 3, 4 | 62240 | 40, 41 |
| 5 | ஜி. பிரகஷ்குமார் | 2006-2007 | முனிசாமி கடை G4, G5, G8, G9, F8, F9, F10, F11, F12 | 187080 | 41, 42 |
| 6 | செல்வன் | 2006-2007 | வெட்டுவெந்நி அலுவலக முன்னால் கடை | 169900 | 41, 42 |
| 7 | ஜெயராஜ் | 2001-2002 | பேருந்து நிலைய கடை எண்.12 | 41960 | 22 |
| 8 | எஸ். சேகர் | 2001-2002 | பேருந்து நிலைய கடை எண்.13 | 76300 | 38 |
| 9 | சி. பாலகிருஷ்ணன் | 2001-2002 | பேருந்து நிலைய கடை எண்.3 | 98960 | 21 |

அ.கு:.- வரிசை எண்.1 முதல் 9 வரை அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3336**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் குப்பைகள் குவிந்து உள்ளதாலும் மேலும் குப்பைகள் கெட்ட போதிய இடவசதி இல்லாததால் பணியின் அவசர அவசியம் கருதி JCB இயந்திரம் மூலம் பழைய குப்பைகள் ஒதுக்கி அதன்மேல் குப்கைள் கொட்ட 13-08-2019 அன்று குறுகிய கால விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் கீழ்வருமாறும்.

1) BDS Earth Movers, ராஜேஷ்குமார் - JCB இயந்திரம் மணிக்கூர் ஒன்றுக்கு - ரூ.1200/-

2) PPN Earth Movers, P. ஜெயராஜன் - JCB இயந்திரம் மணிக்கூர் ஒன்றுக்கு - ரூ.1250/-

3) SVS Earth Movers, - JCB இயந்திரம் மணிக்கூர் ஒன்றுக்கு - ரூ.1300/-

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் உள்ள BDS Earth Movers ஒப்பந்ததாரர் திரு. ராஜேஷ்குமார் என்பவரின் விலைப்புள்ளி தொகை குறைவாக உள்ளதால் உடன் வேலை செய்ய உத்திரவு வழங்கவும், அதற்கான பில்தொகையினை பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண். 3337**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் 1-8-2019-ல்அதிகாலை 4.00 மணிக்கு தீ பிடித்துள்ளதை தொடர்ந்து கொல்லங்கோடு தீயணைப்பு துறை வாகனமும் 2 Hitachi இயந்திரம் மூலம் குப்பைகளை கிளறி விட்டு குப்பைகளை 1-8-2019 முதல் 5-8-2019 வரை வேலை செய்து குப்பைகளை அகற்றிய வகையில் 90 மணி நேரத்திற்கு ரூ.1,10,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி Hitachi இயந்திரம் மூலம் பணி செய்தமைக்கு தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண். 3338**
**அனுமதிக்கப்படுகிறது.**

## குழித்துறை நகர்மன்றத்தின் 30-09-2019 திங்கள் கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பிரிவு வாகனம் TN74Z4605-ன் Self Motor பழுதடைந்துள்ளதால் மேற்படி வாகனம் இயக்க முடியாத நிலையிலுள்ளது. தற்போது நிலவி வரும் வெளியில் காரணமாக உரக்கிடங்கில் தீவிபத்து ஏற்பட்டதால் தீயை அணைக்க மேற்கண்ட வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே Self Motor பழுது நீக்கம் செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | Sunil Auto Electrical works,<br>Kulasekaram Road,<br>Marthandam | 2795 |
| 2 | Xavier Battery Electrical works,<br>Kalluketty,<br>Kuzhithurai | 2745 |

வரப் பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் Xavier Battery Electrical works நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பழுது நீக்கம் செய்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3339**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் T.N75J8227-ற்கு தகுதி சான்று பெறும் பொருட்டு மேற்படி வாகனத்தின்

பழுதுகளை நீக்கம் செய்ய 01-08-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண். | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | 68900 | 1) M/S கணேஷ்மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் 0.31% குறைவு<br>2) M/S அக்ஷயாமோட்டார்ஸ், உண்ணாமலைக்கடை -மதிப்பீட்டு விகிதம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 M/S கணேஷ்மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3340**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 3</u>

மாவட்ட திட்ட அலுவலர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் ந.க.எண்.1121/அ3/2019, நாள் 28-08-2019-ல் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பந்நியாணி மற்றும் வெட்டுவெந்நி அங்கன்வாடி மையங்களை இடித்து புதிய கட்டிடம் கட்டுவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி இடம் பார்வையிடப்பட்டு பழைய கட்டிடத்தை இடித்து மாற்றி புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பி.பி.முனிசாமி வணிகவளாகத்தின் எதிர்புறம் உள்ள பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடத்தினை இடித்து புதிதாக கட்டிடம் கட்டுதல் | 9,80,000 |
| 2 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பந்நியாணி மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைக்கப்பட்டுள்ள வளாகத்தினுள் அமைந்துள்ள பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடத்தினை இடித்து புதிதாக கட்டிடம் கட்டுதல் | 9,80,000 |

மேற்படி பணிகளை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3341**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் மீன்சந்தை மற்றும் லாறிப்பேட்டையிலுள்ள சுற்றுசுவர்கள் உடைந்து சேதமடைந்துள்ளதால் மேற்படி சுற்றுசுவர்கள் மற்றும் Grill Gate அமைப்பதற்கு ரூ.6,90,000/.-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3342**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான சப்பாத்து நீரேற்று நிலையத்திலிருந்து திருத்துவபுரம் OHT-க்கு நீரேற்றும் A மற்றும் B யூனிட் சப்மெர்பிள் நீரேற்றிகளின் 3core 6sq.mm.Flat cable பழுதடைந்த நிலையிலுள்ளதால் நீரேற்றிகள் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. எனவே A மற்றும் B யூனிட் நீரேற்றிகளின் பழைய Flat cable-ஐ மாற்றி புதிய 6sq.mm 3core Flat cable பதித்திட ரூ.60,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3343**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் லாறிப்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள தளம் மிகவும் சேதமடைந்துள்ளதால் லாறிகளை நிறுத்த இயலாத நிலையிலுள்ளது. மீன்பாரம் ஏற்றி வரும் லாறியிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் துர்நாற்றம் ஏற்படுவதோடு சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையிலுள்ளது. மேலும் லாறிப்பேட்டையில் அமைந்துள்ள கழிவுறையில் Septic tank அமைப்பதற்கும், லாறிப்பேட்டையில் சிமெண்டு தளம் அமைத்து வடிகால் ஓடை அமைப்பதற்கு ரூ.9,90,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3344**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 7</u>

தமிழ்நாடு அரசின் மூன்றாண்டு சாதனை மலரின் குழித்துறை நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.9660/- விளம்பரக் கட்டணம் Malar Publication Pvt. Ltd.-க்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணம் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு,
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3345**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சி கணினி வசூல் மையத்தில் வசூலாகும் தொகையினை பாதுகாப்பாக வைப்பதற்குரிய லாக்கர் பழுதுபட்டுள்ளதால் புதிதாக லாக்கர் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவிம் ரூ.1.50 இலட்சம் வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3346**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 9</u>

அரசாணை (நிலை) எண்.110, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21-08-019-ன்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் 2500 சதுர அடி பரப்பளவிற்கு மேற்படாத நிலத்தில் 1200 சதுர அடி பரப்பளவிற்குள் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்கள் இணையதளம் வாயிலாக எளிய முறையில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது குறித்து வழிமுறைகள் வகுத்து அரசாணை பெறப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

F.No.122/2019/TPI.

**நகர்மன்றத் தீர்மான எண். 3347**

**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் வார்டு எண்.20-ல் நந்தன்காட்டில் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யபயன்படுத்தும் வினியோகக் குழாய் மிகவும் பழையதாகஉள்ளதால் குழாயில் அடைப்பு ஏற்பட்டு குடிநீர் வினியோகம் செய்யும் போது துர்நாற்றம் வருவதாலும், சீராக குடிநீர் வினியோகம் செய்ய இயலாததாலும் சுமார் 70 மீட்டர் நீளத்திற்கு புதிதாக 90 எம்.எம். பி.வி..சி குழாய் பதிப்பதற்கும், வார்டு 19 மார்த்தாண்டம் மேம்பாலத்தின் கீழ் பகுதியில் ஆண்டிநாடார் பாத்திர கடை சமீபம் பம்மம் நீர்த்தேக்கத்தொட்டியின் குடிநீர் வினியோகக் குழாய் 6இன்சு பி.வி.சி.யில் உடைவு ஏற்பட்டுள்ளதால் மார்த்தாண்டம் ஆர்.சி.தெரு பகுதிக்கு குடிநீர் வினியோகம் தடைப்படுவதாலும் மற்றும் வார்டு 21-ல் மார்த்தாண்டம் தட்டாக்குடி சமீபம் டோனா கம்ப்யூட்டர் சென்டர் சமீபம் மார்க்கெட் பகுதியிலுள்ள நீர்த்தேக்கத்தொட்டியின் வினியோகக் குழாய் 6இன்சு பி.வி.சி.யில் மேம்பாலத்தின் கீழ்பகுதியில் சாலையின் நடுவே உடைவு ஏற்பட்டுள்ளதாலும் குடிநீர் வினியோகம் தடைப்படுகிறது. எனவே இந்த மூன்று பணிகளையும் செய்வதற்கு மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3348**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20-ல் மார்த்தாண்டம் ஆர்.சி.தெருவில் சாலை மற்றும் வடிகால் ஓடை உடைந்து பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதாலும், வடிகால் ஓடையின் பக்கசுவர் உடைந்து வடிகால் ஓடைக்குள் விழுந்து ஓடை வழியாக கழிவு நீர் செல்ல முடியாமல் தேங்கியுள்ளதாலும் அப்பகுதி மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே சாலையின் மையப்பகுதியில் வடிகால் ஓடை அமைத்து சிமெண்டு தளம் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.9,90,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3349**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 12-வது வார்டில் கண்ணக்கோடு நியாயவிலை கடை எதிரே ரயில்வே பாலம் அருகிலுள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள பவர் பம்பு 1.5HP சப்மொர்சிபிள் பழுதடைந்துள்ளது. மேலும் சப்பாத்து வாவுபலி திடல் பின்புறம் நகராட்சி கழிப்பிடத்தில் உள்ள 1.5HP சப்மொர்சிபிள் மோட்டார், கழுவன்திட்டை ஆர்.சி.தெருவில் நகராட்சிக்கு சொந்தமான பொது கழிப்பிடத்திலுள்ள 1.5HP சப்மொர்சிபிள் மோட்டார், மார்த்தாண்டம் புதிய பேருந்து நிலையம் அருகில் வித்யாஜோதி பள்ளி அருகே உள்ள நகராட்சிக்கு சொந்தமான கிணற்றிலுள்ள 1.5HP ஜெட்மோட்டார், குழித்துறை வாவுபலி பொருட்காட்சி திடலில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பொதுக்கழிப்பிடத்திலுள்ள 1.5HP சப்மொர்சிபிள் மோட்டார் மற்றும் சப்பாத்து நீரேற்று நிலையத்திலுள்ள திருத்துவபுரம் OHT க்கு நீரேற்றும் 1.5HP சப்மொர்சிபிள் நீரேற்றியின் Automatic Start- Star Delta Starter ஆகியவை

பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி பழைய பவர்பம்பு மின்மோட்டார்களை மாற்றி புதிதாக மின்மோட்டார்கள் வாங்கி பொருத்துவதற்கு மதிப்பீடு ரூ.2.20 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

மன்றம் அனுமதிக்கலாம். குடிநீர் நிதியில் மேற்படி பணியை செய்யலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3350**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள தெருவிளக்குகள் பழுதடைந்து இரவு நேரத்தில் இருளடைந்துள்ளது. மேற்படி தெருவிளக்குகளை பராமரிக்க புதிய Street Light Box வாங்கவும், அவசர அவசியம் கருதி பேருந்து நிலையத்திலுள்ள தெருவிளக்குகளை சரி செய்வதற்கும், புதிய Street Light Box வாங்கவும் மதிப்பீடு ரூ.2,20,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3351**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 14</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட திருத்துவபுரம் மற்றும் காட்டுவிளை பகுதியில் பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றி புதிதாக 90mm PVC Pipe அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.2,35,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3352**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 15</u>

குழித்துறை நகராட்சி தெருமின்விளக்குகளை பராமரிப்பு செய்வதற்கு மின்சாதன உதிரிப்பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (11-01-2019-ம் நாளய டெண்டர்) தினசரி நாளிதழில் பிரசுரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.8400/- Two Leaf Mediva-க்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணம் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3353**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தி நிலத்தடி நீரை அதிகரிக்க செய்வதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் Jal Sakthi Abiyan திட்டத்திலும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி சொந்தமான கீழ்காணும் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க ரூ.2,30,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1) நகராட்சி அலுவலகம் | - 4 எண்ணம் |
| 2) முனுசாமி வணிகவளாகம் | - 1 எண்ணம் |
| 3) குழித்துறை வணிகவளாகம் | - 1 எண்ணம் |
| 4) பேருந்து நிலையம் | - 6 எண்ணம்‘ |
| 5) மார்த்தாண்டம் சந்தை | - 5 எண்ணம் |
| 6) அங்கன்வாடிகள் | - 2 எண்ணம் |
| 7) ரேசன் கடை | - 1 எண்ணம் |
| 8) நூலகம் | - 5 எண்ணம் |
| 9) நீரேற்று நிலையம் | - 3 எண்ணம் |
| | ---------------------------- |
| | 28 எண்ணங்கள் |
| | ---------------------------- |

மேற்படி பணிகள் செய்வதற்கு அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3354**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 17</u>

குழித்துறை நகராட்சியில் மார்த்தாண்டம் சந்தையில் லாறிப்பேட்டை அருகில் 4TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் தயாரிக்கும் கூடம் அமைக்கப்பட்டு பணி முடிவுறும் நிலையிலுள்ளது. குப்பைகளை பிரித்து உரம் தயாரிக்கும் Process நடைபெறும் போது மக்காத குப்பைகளை தனியே சேகரித்து குவியல் செய்து மறுசுழற்சி பயன்பாட்டு மையம் (Resource Recovery Centre) அமைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதன்படி இந்நகராட்சியில் RCC அமைப்பதற்கும், மின் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள ETP-ன் பாதுகாப்பு கருதி மேற்கூரை மற்றும் Grill அமைப்பதற்கும் மதிப்பீடு ரூ.3,50,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3355**
**அனுமதிக்கப்படுகிறது**

ஒப்பம்/- திரு.எஸ். மூர்த்தி,
ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.